திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, குடியாத்தம் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்யா ஆற்றின் கரைமீது புறவழிச் சாலை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். சென்ற கூட்டத் தொடரில் நான் கேட்ட துணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். அந்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புவதாகக் கூறியுள்ளார்கள். தேசிய நெடுஞ்சாலை எண் 234, காட்பாடி-குடியாத்தம்-பேரணாம்பட்டு சாலையில் குடியாத்தம் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வு தேசிய நெடுஞ்சாலை அலகு மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

272—

சொந்தக் கட்டடம்

***45956—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சமயபுரம் மற்றும் கே.புதுக்குளத்திலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சமயபுரம் அங்கன்வாடி மையம், சமுதாயக் கூடத்திலும், கே.புதுக்குளம் அங்கன்வாடி மையம், பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த இரு மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிதைகள் பல கொண்ட கலைவாணியே, பாரிஜாத திறன் கொண்ட பராசக்தியே, இலட்சியங்கள் பல கண்ட அஷ்டலட்சுமியே, மக்களைக் காக்கப் பிறந்த பராசக்தியே, தமிழகத்தைக் காக்கும் கருமாரியே, தொண்டர்களின் துயரைத் தீர்க்கும் துர்க்கையே, வாழும் வள்ளலே, மனித தெய்வமே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன்.

மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கட்டிகுளம் ஊராட்சி, சமயபுரத்திலும், குவளைவேலி ஊராட்சி, கே.புதுக்குளத்திலும் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, தற்போது தமிழகத்தில் எத்தனை அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றன, எத்தனை அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன, எத்தனை அங்கன்வாடி மையங்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதிலே பழுதடைந்த, வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்ற 15,313 அங்கன்வாடி மையங்களைச் சீர்படுத்தவும், சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்துக் கட்ட வேண்டும் என்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

273—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***33875—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதி, பென்னாகரத்தில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,